கீழ் தளத்தில் ராஜினாமா, மேல்தளத்தில் கட்சியில் இணைப்பு

தமிழகத்தில் கீழ்த்தரமான அரசியல், குதிரை பேர கலாச்சாரம் அறிமுகம்

இதுதான் தூய சக்தியா? விஜய்க்கு எடப்பாடி கடும் கண்டனம்

சென்னை, மே 26: கீழ் தளத்தில் ராஜினாமா, மேல்தளத்தில் கட்சியில் இணைப்பு என்று தமிழ்நாட்டில் கீழ்த்தரமான அரசியலை, குதிரை பேர கலாச்சாரத்தை அறிமுகப்படுத்திய தவெகவிற்கு எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கை: சுத்த சுயம்பிரகாச தூய சக்தி என்று தன்னைத் தானே அறிவித்துக்கொண்டு அரசியலில் குதித்த திரையுலக பிரபலம், மக்களின் முழுமையான ஆதரவு தனக்கு கிடைக்கவில்லை என்ற நிலையில், தான் அமைத்த பொய்க்கால் குதிரை ஆட்சியைக் காப்பாற்ற பல்வேறு தகிடுதத்த அரசியலில் ஈடுபட்டு வருவது வெட்கக்கேடான ஒன்றாகும். தமிழக அரசியல் வரலாற்றிலேயே இல்லாத வகையில், மோசமான ஒரு குதிரை பேர அரசியலை நடத்தி, தான் அமைத்த மைனாரிட்டி ஆட்சியை காப்பாற்றிக் கொள்ள முனைவது கண்டு தமிழக மக்கள் எள்ளி நகையாடுகின்றனர். தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 126 தொகுதி மக்கள் தனக்கு எதிராக வாக்களித்துள்ளார்கள் என்பதை சிறிதும் உணராமல், தான் எந்தக் கட்சியை தீய சக்தி என்று வருணித்துகளமாடினாரோ அந்தக் கட்சியின் தயவில் வெற்றி பெற்ற ஒருசில கட்சிகளை தேடிப்போய் ஆதரவு கேட்டதும், அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சில சட்டமன்ற உறுப்பினர்களை சோபாவோடு போய் ‘புஷ்பா’ பட பாணியில் ஆதரவு பெற்றதும் ஒரு நேர்மையான அரசியல்வாதியின் செயலா? என்று வாக்களித்த மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அதிமுகவின் மீது விசுவாசம் கொண்டுள்ள உண்மைத் தொண்டர்களின் கடுமையான உழைப்பால், தியாகத்தால் வெற்றிபெற்ற 3 சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து, கோட்டையின் கீழ் தளத்தில் உள்ள சபாநாயகர் அறையில் ராஜினாமா கடிதம் எழுதி வாங்குவதும், அடுத்த 10 நிமிடத்தில் முதல் மாடியில் உள்ள த.வெ.க. அமைச்சர் ஒருவரின் அறையில் அவர்களுடைய கைகளில், கட்சி உறுப்பினர் அட்டை வழங்குவதும் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஓரங்க சதி நாடகத்தை, குதிரை பேரத்தை அம்பலப்படுத்தி உள்ளது.

தற்போதைய தவெக அரசின் இதுபோன்ற தகிடுதத்த வேலைகளை சந்திப்பது தமிழக அரசியலில் புதிதான அணுகுமுறையாகும். எத்தனையோ துரோகச் செயல்களையும், முதுகில் குத்திய நிகழ்வுகளையும் தாங்கித்தான் மக்கள் பணியாற்றி வருகிறது ‘அதிமுக’ என்கிற மாபெரும் பேரியக்கம். இந்த அரசிற்கு முட்டு கொடுக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், தற்போது ராஜினாமா செய்துள்ளவர்களாக இருந்தாலும், திரைப் பிரபலத்தின் சின்னத்திற்கு எதிராக மக்கள் வாக்களித்துதான் வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. இதுபோன்ற துரோகச் செயல்களால் அதிமுகவை அசைத்துப் பார்க்கலாம்; வீழ்த்தி விடலாம்; அந்த இடத்திற்கு நாம் வந்துவிடலாம் என்று யாராவது நினைத்தால் அது பகல் கனவாகவே முடியும். ‘ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை’ என்பதுபோல, ‘பழைய மந்தையில் புதியகள்’ என்பதுபோல, அடுத்தவர்களின் முதுகில் ஏறி பயணம் செய்வதில் தான் தங்களின் வாழ்வு இருக்கிறது என்று செயல்படும் புதிய கரகாட்ட கோஷ்டிக்கு தமிழக மக்கள் விரைவில் தக்க பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தவெகவின் குதிரை பேர அரசியல் வெட்டவெளிச்சமாகி வருகிறது

டிடிவி.தினகரன் குற்றச்சாட்டு

சென்னை, மே 26: தவெகவின் குதிரைபேர அரசியல் தொடர்ந்து வெட்ட வெளிச்சமாகி வருகிறது என டிடிவி.தினகரன் தெரிவித்துள்ளார்.

தவெக ஆட்சியமைக்க 107 எம்எல்ஏக்கள் ஆதரவு உள்ள நிலையில் 12 எம்எல்ஏக்கள் பற்றாக்குறை நிலவி வந்தது. அப்போது அமமுக சார்பில் மன்னார்குடி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எஸ்.காமராஜ் ஆதரவு கடிதத்தையும் சேர்த்து ஆளுநரிடம் விஜய் அளித்திருப்பது தெரியவந்துள்ளது. இதற்காக கடந்த மே 8 அன்று இரவு, ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சந்தித்த டிடிவி.தினகரன், தனது கட்சியின் மன்னார்குடி தொகுதி எம்எல்ஏ காமராஜை காணவில்லை என்று புகார் அளித்தார். தவெக (தமிழக வெற்றிக் கழகம்) சார்பில் ஒரு ஜெராக்ஸ் நகல் ஆதரவுக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், அது குதிரைபேரம் அல்லது மோசடி என்றும் குற்றம்சாட்டினார். அதற்கு பிறகு சட்டசபையில் காமராஜ் தவெகவிற்கு ஆதரவாக பேசியதாக கட்சியில் இருந்து அவரை டிடிவி.தினகரன் நீக்கினார். தற்போது அதிமுக எம்.எல்.ஏ.க்கள் மூவர் தங்கள் பதவியை ராஜினாமா செய்த கையோடு தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர். இதற்கு பல்வேறு கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இதுதொடர்பாக அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவு:

ஆளுநர் மாளிகை முன் நடுநிசியில் நான் வெளிக்கொணர்ந்த தவெகவின் குதிரைபேர அரசியல் தொடர்ந்து வெட்ட வெளிச்சமாகி வருகிறது. ஜெயலலிதா தொண்டர்களை குதிரை பேரத்தின் மூலம் அழிக்க நினைக்கும் நாசகார சக்திக்கு தமிழக மக்கள் முடிவுரை எழுதும் காலம் விரைவில் வரப்போகிறது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

தவெகவில் இணைந்த அதிமுக எம்எல்ஏக்கள்

விசிக எதிர்ப்பு

சென்னை, மே 26: வி.சி.க பொருளாளர் எஸ்.எஸ். பாலாஜி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவு: 3 எம்.எல்.ஏ.,க்களின் செயல் அறமற்றது, அவர்களை வரவேற்பது ஆபத்தானது, நேர்மையான மற்றும் உண்மையான அரசியலில் ஈடுபடுவோம் என்ற தவெக தலைவர் விஜய்யின் கூற்றுக்கு இது ஒரு அச்சுறுத்தலாகும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

pnb Housing Finance Limited — பதிவு அலுவலகம்: 9வது தளம், அந்த்ரிஷ் பவன், 22, கே.ஜி. மார்க், புதுடெல்லி-110001 தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com
கிளை முகவரி: RH-சென்னை-கிண்டி, சி 45, முதல் தளம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-600032

சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துகளுக்காக)

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் கீழ் & கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் விதி 8(1) உடன்பாட்டில், மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஒவ்வொரு கணக்குக்கும் எதிரே குறிப்பிட்ட தேதியில் கோரிக்கை அறிவிப்பு/கள் வழங்கி சம்பந்தப்பட்ட கடன்தாரர்/கள் ஒவ்வொரு கணக்குக்கும் எதிரே குறிப்பிட்டவாறு தொகையை அறிப்பு(கள்) தேதி/மேற்கூறிய அறிவிப்பு/கள் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர்/கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார். இதன்மூலம் கடன்தாரர்/கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்து/களை ஒவ்வொரு கணக்குக்கும் எதிரே குறிப்பிட்ட தேதிகளில் சுவாதீனம் செய்துள்ளார். கடன்தாரர்/கள் குறிப்பாகவும் மேலும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது, சொத்து/கள் உடன் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம்; மேலும் சொத்து/கள் உடனான அனைத்து நடவடிக்கைகளும் தொகை மற்றும் கடன் ஒப்பந்தப்படி அதன் மீதான வட்டிக்காக, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் வசூலுக்கு உட்படும். கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு, கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.

வ. எண்	கடன் கணக்கு எண்.	கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள்	நிலுவைத் தொகை	சுவாதீனம் செய்த நாள்	அடமானம் வைக்கப்பட்ட சொத்துகளின் விவரம்:
1	HOU/OMR/0425/1384962	திரு. லட்சுமி பிரசாந்த் JJ, திருமதி B M திவ்யா	12/03/2026	11-03-2026 தேதியன்று ரூ. 36,93,664 (ரூபாய் முப்பத்து ஆறு லட்சத்து தொன்னூற்று மூன்று ஆயிரத்து அறுநூற்று அறுபத்து நான்கு மட்டும்)	21-05-2026 (கையக சுவாதீனம்)	அட்டவணை – II: கடனீட்டுச் சொத்தின் விவரங்கள்: மனை எண் 359, பழைய சர்வே எண் 347/9, பழைய பட்டா எண் 3013, புதிய பட்டா எண். 3801–இன் படி சர்வே எண் 347/503 இல் உள்ள 1800 சதுர அடி பரப்பளவு கொண்ட அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள காலி மனை உள்ள சொத்து, DTCP ஒப்புதல் எண் CR/DTCP; M–83–64/L.P.No.33 வாயிலாக அங்கீகரிக்கப்பட்ட சுந்தரபுரம் லேஅவுட்டில் அமைந்துள்ளது. இது செங்கல்பட்டு வட்டம், முன்பு காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம், கலிவந்தப்பட்டு கிராமம், சுந்தரபுரம் லேஅவுட்டில் அமைந்துள்ள இந்தச் சொத்து மறைமலைநகர் பேரூராட்சி எல்லைக்குள் உள்ளது. இதன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கில்: மனை எண். 340; தெற்கில்: 24 அடி சாலை; கிழக்கில்: மனை எண். 360; மேற்கில்: மனை எண். 358. இதன் அளவீடு: வடக்கு பக்கம்: 30 அடி; தெற்கு பக்கம்: 30 அடி; கிழக்கு பக்கம்: 60 அடி; மேற்கு பக்கம்: 60 அடி. செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் சார்பதிவு மாவட்ட எல்லைக்குள் இந்தச் சொத்து அமைந்துள்ளது.

நாள்:- 21-05-2026, இடம்:- சென்னை — ஓம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

3 அதிமுக எம்எல்ஏக்கள் திடீர் ராஜினாமா...

முதல் பக்க தொடர்ச்சி

மீண்டும் சீட், வெற்றி பெறவுடன் வாரிய தலைவர் பதவி வழங்கப்படும் என்று அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. அதற்கு 10 எம்எல்ஏக்கள் வரை சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், அதிமுக எம்எல்ஏக்களான மதுராந்தகம் தொகுதி மரகதம் குமரவேல், பெருந்துறை ஜெயக்குமார், தாராபுரம் சத்யபாமா ஆகிய 3 பேர் தங்களுடைய எம்எல்ஏ பதவியை நேற்று திடீரென ராஜினாமா செய்தனர். வேலுமணி தரப்பு ஆதரவு எம்எல்ஏக்களான அவர்கள் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரை சென்னை தலைமை செயலகத்தில் நேரில் சந்தித்து ராஜினாமா கடிதம் அளித்தனர். ராஜினாமா கடிதத்தை அளித்த கையோடு, மூவரும் தலைமை செயலகத்தில் உள்ள பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா அலுவலகத்தில் அவரது முன்னிலையில் தவெகவில் இணைத்துக் கொண்டனர். தவெகவில் இணைந்த அவர்களுக்கு உடனடியாக புகைப்படத்துடன் கூடிய தவெக உறுப்பினர் அட்டையும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து தவெகவில் இணைந்த மரகதம் குமரவேல், ஜெயக்குமார், சத்யபாமா ஆகியோர் முதல்வர் விஜய்யை நேரில் சந்தித்து வாழ்த்தும் பெற்றனர். தொடர்ந்து சுமார் 5 நிமிடம் அவர்களிடம் முதல்வர் விஜய் ஆலோசனை நடத்தினார்.

ஏற்கனவே தலைமைச் செயலகத்தை கட்சி அலுவலகமாக புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா ஆகியோர் மாற்றி வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், எம்எல்ஏக்களை தலைமைச் செயலகத்தில் வைத்து சேர்த்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோல ஒரிரு நாளில் அடுத்தடுத்து 7 எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. அதிமுக வேட்பாளராக வெற்றி பெற்று, வெறும் 21 நாட்களில் ராஜினாமா செய்துள்ள மூவரும் மற்றொரு கட்சியில் உடனே இணைந்துள்ளது எடப்பாடி, எஸ்.பி.வேலுமணி தரப்பு, அதிமுக நிர்வாகிகள், தொண்டர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில் முதல்வர் விஜய் எம்எல்ஏக்களை இழுக்கும் படலத்தில் ஈடுபட்டுள்ளது ஏன் என்பது தொடர்பாக புதிய தகவல் வெளியாகியுள்ளது. தற்போது தவெகவிற்கு ஆதரவு அளித்துள்ள கட்சிகள் ஏற்கனவே திமுக கூட்டணியில் இருந்து வெற்றி பெற்று வந்தவர்கள். அவர்கள் இறுதி வரை கூட்டணியில் தொடர்வார்களா என்பது கேள்விக்குறி தான். எந்த நேரத்திலும் அவர்கள் காலை வாரி விட வாய்ப்புள்ளது. 10 ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சி அமைவதற்கும், ராகுல்காந்தியை காங்கிரசே பிரதமர் வேட்பாளராக அறிவிக்காதநிலையில் திமுக தலைவர் ஸ்டாலின்தான், அவரை பிரதமர் வேட்பாளராக அறிவித்திருக்கும் நிலையில், திமுகவிடம் சொல்லாமல், அந்தர் பல்டி அடித்து கூட்டணி அரசில் சேர்ந்திருப்பவர்கள், நாளை நம்மையும் அப்படியே அம்போவென விட்டுச் செல்லமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது என்று தனது நெருங்கிய சகாக்களிடம் விஜய் கூறியுள்ளார். இப்படிப்பட்டவர்களை நம்பியிருந்தால் ஆட்சியை இழக்க தான் செய்ய வேண்டும். எனவே, அவர்களின் ஆதரவை தாண்டி மேலும் எம்எல்ஏக்கள் பலம் வேண்டும். அதற்கு அதிமுக எம்எல்ஏக்களை தங்கள் பக்கம் இழுப்பது தான் ஒரே வழி என்ற முடிவுக்கு விஜய் வந்துள்ளார். இதனால் எம்எல்ஏக்களை இழுக்க குதிரை பேரம், தவெகவிற்கு வந்தால் மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என்று ஆசை வார்த்தை காட்டப்பட்டது. 20 சி வரை வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மேலும் வெற்றி பெற்றவுடன் வாரிய தலைவர் பதவியும் வழங்கப்படும் என்ற ஆசைவார்த்தையில் தான் அதிமுக எம்எல்ஏக்கள் 3 பேரும் ராஜினாமா செய்துவிட்டு தவெகவிற்கு வந்துள்ளனர். அவர்களுக்கு அதே தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட உள்ளது. அவர்கள் அந்த தொகுதியில் தவெகவின் விசில் சின்னத்தில் போட்டியிட உள்ளனர். அதிமுகவில் 3 எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்ததை தொடர்ந்து அதிமுகவின் எம்எல்ஏக்களின் பலம் 44 ஆக குறைந்துள்ளது. அதே நேரத்தில் அதிமுக எம்எல்ஏக்கள் 3 பேர் ராஜினாமா செய்துள்ள நிலையில், தமிழ்நாடு சட்டப்பேரவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 230 ஆக குறைந்துள்ளது. ஏற்கனவே திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை முதல்வர் விஜய் ராஜினாமா செய்துள்ளார். தற்போது 3 எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்துள்ளனர்.

இதனால் 4 தொகுதிகள் காலியாகியுள்ளது. ஒரு எம்எல்ஏ தொகுதி காலியானால் 6 மாதத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என்பது விதி. அதன்படி தொகுதிகள் காலியானதாக முதலில் அறிவிக்கப்படும். அதன் பிறகு காலியாக உள்ள தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட்.
CIN: U67100TZ2014PTC020363
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர்மார்க் R.G.கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை-400028.
பதிவு அலுவலகம்: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்குநகர் விரிவாக்கம், திருப்பூர்-641607.
மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com, அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண்: + 91 93446 84194/+91 98840 62068/9962333307

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் பொது அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் r/w 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஒஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஒஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 33/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) எடெல்வீஸ் வீட்டுவசதி நிதி லிமிடெட் (உரிமையீந்தோர்) வசமிருந்து 30.03.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஒஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப-கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஒஏஆர்பிஎல்–க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர்கள்& உப கடன்தாரர்களின் பெயர்: திரு.S.செந்தில்குமார் & திருமதி. அம்பிகாவதி

கடனீட்டுச் சொத்து விவரங்கள்– 22.06.2018 தேதியிட்ட ஆவண எண்.2980/2018 மற்றும் 2981/2018 இன்படி திரு.S.செந்தில்குமார், த/பெ, திரு.G.சுப்ரமணிக்குச் சொந்தமான சொத்து.

அட்டவணை "A" சொத்து

சர்வே எண் 14 பகுதி கொன்னூர் கிராமம், புரசைவாக்கம்–பெரம்பூர் வட்டம், சென்னை மாவட்டத்தில் அமைந்துள்ள முறையே 1883 சதுர அடி மற்றும் 825 சதுர அடி பரப்பளவு உள்ள 39 ஆவது கக்கன்ஜி தெரு, ஜெனரல் குமாரமங்கலம் காலனி, சென்னை 600082 இடத்தில் அமைந்துள்ள மனை எண். 15 பகுதி மற்றும் 16 என்ற காலி நிலத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி (திட்ட அனுமதி எண் PPA/WDC06/13034/2012 மூலம் மூலம் மனை எண் 15–க்காக 15.03.2013 தேதியிட்ட கட்டிட அனுமதி எண் BA/CD06/02020/2013, சென்னை மாநகராட்சி மூலம் அனுமதி பெற்ற மனை மேலும் திட்ட அனுமதி எண் PPA/WDC06/13036/2012 மேலும் மனை எண் 16–க்கு 13.02.2013 தேதியிட்ட கட்டிட அனுமதி எண் BA/CD06/01070/2013): இனம் எண்.1: மனை எண் 15–க்கான அளவீடு மற்றும் எல்லைகள்: வடக்கில்: மனை எண். 13, 14, தெற்கில்: மனை எண் 19, கிழக்கில்: 39 ஆவது தெரு, மனை எண் 15 இன் மீதிப் பகுதி, மேற்கில்: மனை எண் 16. அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 22.0 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 22.0 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 37.5 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 37.5 அடி. அனைத்து அளவீட்டின்படி பரப்பளவு 825 சதுர அடி.
இனம் எண்.2: மனை எண் 16–க்கான அளவீடு மற்றும் எல்லைகள்: வடக்கில்: மனை எண் 13, கிழக்கில்: மனை எண் 15, தெற்கில்: மனை எண் 17, மேற்கில்: தெரு.அளவீடு –வடக்குப் பக்கத்தில்: 50.0 அடி, தெற்குப் பக்கத்தில்: 52.5 அடி, கிழக்குப் பக்கத்தில்: 37.5 அடி, மேற்குப் பக்கத்தில்: 36.5 அடி. அனைத்தும் அளவீட்டின்படி பரப்பளவு 1883 சதுர அடி.
இனம் எண். 1 இன் பரப்பளவு: 825 சதுர அடி, இனம் எண். 2 இன் பரப்பளவு: 1883 சதுர அடி
மொத்தப் பரப்பளவு: 2708 சதுர அடி

அட்டவணை 'B' சொத்து (கொள்முதலாளருக்கு உரிமை மாற்றப்பட்ட நிலம்)

கட்டுமான ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டவாறு முழு அறைகலன் வசதியமைக்கப்பட்ட ஃபிளாட்டுன் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாத பங்கு 200 சதுர அடி பரப்பளவு, அதற்கு தொடர்புடைய அனைத்து உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுடன் காலி வீட்டு மனையின் அனைத்து துண்டு மற்றும் பகுதி.

அட்டவணை 'C' சொத்து

மேற்கூறிய அட்டவணை 'A' குறிப்பிட்ட சொத்தின் பகுதியான தரை தளம், ஃபிளாட் எண் G–3 "ஈடன் கார்டன் அபார்ட்மெண்ட்" ஆக அறியப்படும் கட்டிடத்தில் 553 சதுர அடி (பொதுப் பகுதி உட்பட) பரப்பளவு உள்ள சொத்து.

சொத்தின் உரிமையாளர்:	திரு.S.செந்தில்குமார்		
13(2) அறிவிப்பு நாள் 06.12.2022	கையக சுவாதீனம் நாள் 27.05.2024	25.05.2026 தேதியின்படி நிலுவைத் தொகை ரூ.54,65,443/– (ரூபாய் ஐம்பத்து நான்கு லட்சத்து அறுபத்தைந்தாயிரத்து நானூற்று நாற்பத்து மூன்று மட்டும்)	
நிர்ணய விலை ரூ.21,70,000/– (ரூபாய் இருபத்தொரு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்)	முன்வைப்புத் தொகை நிர்ணய விலையில் 10% ரூ.2,17,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து பதினேழாயிரம் மட்டும்	ஏலம் உயர்த்தும் தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)	சொத்தைப் பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்கூட்டிய அனுமதியுடன். தலைப்பில் செல்பேசி எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
கணக்கு விவரங்கள்:	கணக்கு எண்.344905001015, பயனாளரின் பெயர்: ஓம்காரா பிஎஸ்33/2020–21 ட்ரஸ்ட், வங்கியின் பெயர்:ஐசிஐசிஐ பேங்க், கிளை: பிகேசி, மும்பை, IFSC Code:ICIC0003449		
மின்–ஏலம் நாள் & நேரம்		ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள்	
18 ஜூன் 2026 (வியாழக்கிழமை) நண்பகல் 12.00 முதல் பகல் 01.00 வரை.		16 ஜூன் 2026 (செவ்வாய்கிழமை) பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக	

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஒஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) கீழ் r/w 9(1) விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 26.05.2026 முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்குரிய அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் மின்–ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடைபெறுவது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கும், கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் r/w 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 15 (பதினைந்து) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

நாள்: 26.05.2025
இடம்: சென்னை

(கார்த்தி கோவிந்தசாமி) கைபேசி எண். 9344684194
அதிகாரப்பூர்வ அதிகாரி, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்.
(ஓம்காரா பிஎஸ் 33/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)

எண். A/28883/BS/CAO/DD/25
இந்திய அரசு
பாதுகாப்பு அமைச்சகம்
JS மற்றும் CAO அலுவலகம்
பாதுகாப்பு அலுவலக வளாகம்,
A–பிளாக், ஆப்பிரிக்கா அவென்யூ,
புது தில்லி – 110023

நாள்: 30 ஏப்ரல் 2026

அறிவிப்பு

புது தில்லியில் அமைந்துள்ள விமானப்படைத் தலைமையகத்தில் துணை இயக்குநராகப் பணிபுரியும் (பிறந்த தேதி: 29.05.1985), எண் 07, அக்ரஹாரம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை–600010 –ஐச் சேர்ந்த திரு. பி. சதீஷ் சந்தர் பால் என்பவருக்கு எதிராக, சில கடுமையான ஒழுங்கீனச் செயல்கள் காரணமாக, மார்ச் 25, 2026 தேதியிட்ட குறிப்பாணை எண். A/28883/BS/CAO/DD/25 வாயிலாக ஒழுங்கு நடவடிக்கை நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. துறைக்குத் தெரிந்திருந்த அனைத்து முகவரிகளுக்கும் 2026 மார்ச் 25 தேதியிட்ட மேற்படி குறிப்பாணை அனுப்பிவைக்கப்பட்டது; ஆயினும், அஞ்சல் துறையினரால் அவை அனைத்தும் விநியோகிக்கப்படாமல், அலுவலகத்திற்கே திரும்பப் பெறப்பட்டன.
எனவே, துணை இயக்குநர் திரு. பி. சதீஷ் சந்தர் பால், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட அல்லது பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள், கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரியின் முன் நேரில் ஆஜராகி, மார்ச் 25, 2026 தேதியிட்ட மேலே குறிப்பிடப்பட்ட குறிப்பாணையைப் பெற்றுக்கொண்டு, அதற்கேற்ப தனது தற்காப்பு விளக்கத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று இந்தப் பொது அறிவிப்பின் வாயிலாகத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு செய்யத் தவறினால், இவ்விஷயம் குறித்து அவர் கூறுவதற்கு ஏதுமில்லை என்று கருதப்பட்டு, வழக்கு நடவடிக்கைகள் அதற்கேற்ப முன்னெடுத்துச் செல்லப்படும்.
ஓம்/–
இயக்குநர் (DCW & பயிற்சி)

cbc 10107/11/0003/2627

கர்நாடக முதல்வர் மாற்றம்

காங்கிரஸ் தலைவர்கள் இன்று ஆலோசனை

பெங்களூரு, மே 26: கர்நாடக முதல்வர் பதவிக்கு தற்போதைய துணை முதல்வர் டி.கே.சிவகுமார் முயற்சி செய்கிறார். ஆனால், காங்கிரஸ் மேலிடம் இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை.

இந்நிலையில் காங்கிரஸ் மேலிடத்தின் அழைப்பை ஏற்று முதல்வர் சித்தராமையா டெல்லி சென்றுள்ளார். அதே போல் நேற்று இரவு டி.கே.சிவகுமாரையும் கட்சிமேலிடம் திடீரென அழைத்தது. அவரும் டெல்லி புறப்பட்டு செல்கிறார். டெல்லியில் கட்சியின் அகில இந்திய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் கே.சி. வேணுகோபால் உள்பட மூத்த தலைவர்களை சந்தித்து ஆலோசனை நடத்த கிறார்கள். இதில் முதல்வர் மாற்றம், அமைச்சரவை மாற்றம், குறித்து விவாதிக்கப்பட இருக்கிறது.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட்.
CIN: U67100TZ2014PTC020363
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர்மார்க் R.G.கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை-400028.
பதிவு அலுவலக முகவரி: எண்.9, எம்.பி. நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர்-641607
மின்னஞ்சல்:karthi.govindasamy@omkaraarc.com, அதிகாரபூர்வ அதிகாரி: கைபேசி எண்: + 91 93446 84194/+91 98840 62068/9962333307

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) & 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் பொது அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் r/w 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஒஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஒஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) ஃபுல்லெர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (உரிமையீந்தோர்) வசமிருந்து 26.02.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஒஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழே குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப-கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஒஏஆர்பிஎல்–க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

வ. எண்	கடன்தாரர் / உப கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள்/ சர்ஃபாசி சட்டத்தின் பிரிவு 13(2) இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு /கையக சுவாதீன தேதி	சொத்தின் உரிமையாளர்	கடனீட்டு சொத்து விவரங்கள்:	சொத்தின் தன்மை	25.05.2026 தேதியின்படி நிலுவைத் தொகை	நிர்ணய விலை/ ஏலம் உயர்த்தும் தொகை	நிர்ணய விலையில் 10% முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம்
தொகுதி 1	திரு. M.R.ராஜாராம் / திருமதி. ப்ரியா R மற்றும் M/s. அண்ணாமலை நெட்வொர்க்ஸ் அண்ட் டெலிசிஸ்டம்ஸ் 13(2) தேதி: 14.02.2020 கையக சுவாதீன நாள்: 30.09.2024	திரு. M.R.ராஜாராம்	அட்டவணை A – டிடிசிபி அனுமதி எண்.179/2002 மற்றும் திட்ட அனுமதி எண்.45/2013 இன்படி உருவாக்கப்பட்ட, சர்வே எண்கள்.82/2A மற்றும் 82/2B இல் உள்ள கார்த்திக் நகர் விரிவாக்கம் 1 இல் புதிய எண்.169, மாடம்பாக்கம் கிராமம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மனை எண்.25, பரப்பளவு 2222 ச.அடி உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலமும் கட்டிடமும் உள்ள சொத்து. இது சென்னை தெற்கு பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்திற்குள் உள்ளது. அதன் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.24, தெற்கில்: மனை எண்.26, கிழக்கில்: காலி நிலம், மேற்கில்: 23 அடி லேஅவுட் சாலை, அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்.63 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்.64 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்.35 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம். 35அடி. மொத்தப் பரப்பளவு 2222 சதுர அடி. இது சென்னை தெற்கு பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்து உள்ளது. அட்டவணை B: அட்டவணை A இல் உள்ள சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 294 ச.அடி உள்ள பிளாட் எண்.S–1, இரண்டாவது தளம், அட்டவணை A இல் குறிப்பிடப்பட்ட சொத்தில் உள்ள முகப்பு பகுதி 712 ச.அடி உள்ள சொத்து.	அடுக்குமாடி குடியிருப்பு	ரூ.50,98,550/– (ரூபாய் ஐம்பது லட்சத்து தொன்னூற்று எட்டாயிரத்து ஐந்நூற்று ஐம்பது மட்டும்)	ரூ.18,00,000/– (ரூபாய் பதினெட்டு லட்சம் மட்டும்) ஏல உயர்வு தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)	ரூ.1,80,000/– (ரூபாய் ஒரு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)	அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்கூட்டிய அனுமதியுடன். தலைப்பில் செல்பேசி எண்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.
தொகுதி 2	திரு. M.R.ராஜாராம் / திருமதி. ப்ரியா R மற்றும் M/s. அண்ணாமலை நெட்வொர்க்ஸ் அண்ட் டெலிசிஸ்டம்ஸ் 13(2) தேதி: 14.02.2020 கையக சுவாதீன நாள்: 30.9.2024	திரு. M.R.ராஜாராம்	டிடிசிபி அனுமதி எண்.179/2002 மற்றும் திட்ட அனுமதி எண்.45/2013 இன்படி உருவாக்கப்பட்ட, சர்வே எண்.82/2A மற்றும் 82/2B இல் உள்ள கார்த்திக் நகர் விரிவாக்கம் 1 இல் புதிய எண்.169, மாடம்பாக்கம் கிராமம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மனை எண்.25, பரப்பளவு 2222 ச.அடி உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலமும் கட்டிடமும் உள்ள சொத்து. இது சென்னை தெற்கு பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்திற்குள் உள்ளது. அதன் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.24, தெற்கில்: மனை எண்.26, கிழக்கில்: காலி நிலம், மேற்கில்: 23 அடி லேஅவுட் சாலை, அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்.63 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்.64 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்.35 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம். 35அடி. மொத்தப் பரப்பளவு 2222 சதுர அடி. இது சென்னை தெற்கு பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்து உள்ளது. அட்டவணை B: அட்டவணை A இல் உள்ள சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 315 ச.அடி உள்ள பிளாட் எண்.S–2, இரண்டாவது தளம், அட்டவணை A இல் குறிப்பிடப்பட்ட சொத்தில் உள்ள முகப்பு பகுதி 761 ச.அடி உள்ள சொத்து அட்டவணை A இல் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப்பகுதி உள்ளடங்கியது.	அடுக்குமாடி குடியிருப்பு	ரூ.52,17,282/– (ரூபாய் ஐம்பத்திரண்டு லட்சத்து பதினேழாயிரத்து இருநூற்று எண்பத்திரண்டு மட்டும்)	ரூ.19,00,000/– (ரூபாய் பத்தொன்பது லட்சம் மட்டும்) ஏல உயர்வு தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)	ரூ.1,90,000/– (ரூபாய் ஒரு லட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்	அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்கூட்டிய அனுமதியுடன். தலைப்பில் செல்பேசி எண்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

கணக்கு எண்.344905000929, பயனாளரின் பெயர்: ஓம்காரா பிஎஸ் 22/2020-21 ட்ரஸ்ட், வங்கியின் பெயர்: ஐசிஐசிஐ பேங்க், கிளை: பாந்த்ரா (கிழக்கு), மும்பை, IFSC Code: ICIC0003449

மின்-ஏலம் நாள் & நேரம்	தொகுதி 1: 18 ஜூன் 2026 (வியாழக்கிழமை) முற்பகல் 11.00 முதல் நண்பகல் 12.00 வரை. தொகுதி 2: 18 ஜூன் 2026 (வியாழக்கிழமை) முற்பகல் 12.00 முதல் நண்பகல் 1.00 வரை.
ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள்:	16 ஜூன் 2026 (செவ்வாய்கிழமை) பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஒஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் r/w 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 15 (பதினைந்து) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். மேலே குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் மின்னணு ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடத்துவது குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கும்.
இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 26.05.2026 முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்கு அறிவுறுத்தும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

நாள்: 26.05.2026
இடம்: சென்னை

(கார்த்தி கோவிந்தசாமி)கைபேசி எண். 9344684194
அதிகாரப்பூர்வ அதிகாரி, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்.
(ஓம்காரா பிஎஸ் 22/2020-21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)